இயற்கைவள முகாமைத்துவ நிலையம்
விவசாயத் திணைக்களம்
இல. 05, சரசவி மாவத்தை, பேராதனை, இலங்கை.

தொலைபேசி / தொலைநகல் - 94-81-2388355 தபால் - த. பெ. இல. 52,

---

எனது இல – NRMC/1/17 நவம்பர் 2, 2020

விவசாயப் பணிப்பாளர் நாயகம்,

# வளிமண்டலவியல் ஆலோசனைகள் - நவம்பர் முதல் ஜனவரி வரை - 2020/21 காலபோகம்

தற்போதைய கால போகத்தின் நவம்பர் முதல் ஜனவரி வரையான மழைவீழ்ச்சி தொடர்பான தகவல் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் சாராம்சம் பின்வருமாறு:

**நவம்பர்**

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் நவம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் வழமையை விட குறைவான மழை வீழ்ச்சியும் கிடைக்குமெனவும், வட மாகாணத்தில் வழமையைவிட சற்று அதிக மழை வீழ்ச்சி கிடைக்குமெனவும், **நவம்பர் மாதத்தின் பிற்பகுதியில் வழமையை விட அதிகரித்த** மழையானது இலங்கையின் பெரும்பாலான பகுதிகளுக்கு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இம்மாதத்தின் மொத்த மழைவீழ்ச்சியானது வழயையைவிட அதிகமாக இருக்கும். (உரு 1).



**உரு 1. 2020 நவம்பர் - 2021 ஜனவரி வரையான மாதங்களிற்கான மழைவீழ்ச்சி எதிர்வு கூறல்**

*(மூலம்: வளிமண்டலவியல் திணைக்களம், நவம்பர் 2, 2020)*

**டிசம்பர்**

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளுக்கு வழமையை விட அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்கும் சந்தர்ப்பம் அதிகம். குறிப்பாக வடக்கு, கிழக்கு, ஊவா, வட மத்திய மாகாணங்களுக்கு கிடைப்பதற்கான அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

**ஜனவரி**

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளுக்கு வழமையை விட அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்கும், குறிப்பாக வடக்கு, கிழக்கு, ஊவா, வட மத்திய மாகாணங்களுக்கு கிடைப்பதற்கான அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

ஆகவே, இந்த ஆலோசனைப்படி உலர், இடை வலயங்களில் உள்ள நீர்த் தேக்கங்களில் நவம்பர் இறுதி வரை போதுமானளவு நீரானது கிடைக்கப் பெறாது எனவும், கடந்த இரண்டு மாதங்களிலும் இவ்விரு காலநிலை வலயங்களிலும் அதிகளவான வறட்சி நிலவியதாவும் குறிப்பிடப்படுகின்றது. எனவே, தாங்கி, நீர்த் தேக்கங்களின் **நீர்ப்பாசனத்தினை அடிப்படையாகக் கொண்ட விவசாயம்** தொடர்பான வளிமண்டலவியல் அறிவுறுத்தல் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

- மென்மையான இழையமைப்பைக் கொண்ட மண்ணில் புழுதி விதைப்பை மேற்கொள்வது பொருத்தமானது (கிழக்கு மாகாணம் - DL2a, DL2b, வட மாகாணம் - DL3, குருணாகல் மாவட்டத்தின் ஒரு பகுதி – IL3) வழக்கமான நடைமுறை போன்றே.
- நிலத்தைப் பண்படுத்த கால போகத்தின் ஆரம்ப மழையைப் பயன்படுத்துவது **கட்டாயமாகும்.** குறிப்பாக நவம்பர் மாதத்தின் முதல் 2 கிழமைகளில் பெய்யும் மழையுடன் பன்படுத்தலாம்.
- 3 வார இடைவெளியினுள் நிலப்பண்படுத்தலை பூர்த்தி செய்யவும் (உயர்ந்தபட்சம்)
- நவம்பர் மாதத்தின் இறுதியில் நிலப் பண்படுத்தலை பூர்த்தி செய்த பின்னர், திருப்திகரமான அளவில் (குறைந்தபட்சம் 30 - 40%) நீர் தேக்கங்களில் நீரானது சேமிக்கப்பட்டிருப்பின் 3 ½ மாத நெல் வர்க்கங்களை மாத்திரம் தெரிவு செய்யவும்.
- போதுமானளவு நீரானது தாங்கிகளில் அல்லது நீர்த் தேக்கங்களில் தற்போது சேமிக்கப்பட்டிருப்பின், நவம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் 4 மாத நெல் வர்க்கங்களை பயிரிட முடியும், இல்லையெனின் மீண்டும் எதிர்ப்பு வர்க்கமான 3 ½ மாத நெல் வர்க்கங்களை தெரிவு செய்யவும்.
- டிசம்பர் மாதத்தின் கடைசியில் தாங்கிகளில் அல்லது நீர்த் தேக்கங்களில் குறைந்தளவில் நீர் சேமிக்கப்பட்டிருப்பின் தட்டு முறையில் பயிர்ச் செய்வதற்கு 2 ½ மாத நெல் வர்க்கங்களை தெரிவு செய்யவும்.
- நெற் தாவரத்தின் வளரும் பருவத்தில், முதிர்ச்சி பருவத்தில் ஒவ்வொரு வாரமும் நிலவும் மழையை கவனத்திற் கொள்வதன் மூலம் பெரிய, சிறிய நீர்ப்பாசன அமைப்புக்களில் கடுமையான நீர் வழங்கும் திட்டங்களை பின்பற்றுதல்.

- வயல் நிலங்களில் பயிர்களை ஸ்தாபிப்பதற்காக நடவு செய்தல், நாற்றுக்களை வீசி விதைத்தல் (பரசூட் முறை) முறைகளை பின்பற்றுவது பொருத்தமானது.
- நீர்வடிப்பு சாதகமாக உள்ள பிரதேசங்களில் மறுவயற் பயிர்களை பயிரிட்டு அதற்குரிய பொருத்தமான **நீர் வடிப்பு முறைகளை** பின்பற்றவும். குறிப்பாக மகாவலி அமைப்பு, ஏனைய பெரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களை ஊக்குவிக்கவும், இந்த கால போகத்தில் நெற் செய்கைக்காக நாம் எதிர்ப்பார்த்திருந்த நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு அதே அளவில் இருக்குமென நிச்சயித்து கூற முடியாது.

**மேட்டுநில பயிர்ச் செய்கை**

- நவம்பர் மாதத்தின் நடுப்பகுதியிற்கு பின்னரான விதைப்பில் தானிய வகைகளை அதன் வழக்கமான முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் வளர்க்கலாம்.
- மேட்டுநில பயிர்ச் செய்கையில் நீண்ட வயதுடைய மிளகாய், சோளம் போன்ற பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள உள்ள விவசாயிகள், நவம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் கிடைக்கும் மழையுடனேயே நிலப்பண்படுத்தலை ஆரம்பித்து, நவம்பர் மூன்றாம் வாரத்திற்கு முன்பு விதைத்தல் (சோளம்), களத்தில் நடல் (மிளகாய்) போன்றவற்றை பூர்த்தி செய்யவும்.

**பொதுவாக,**

- சாத்தியமான மண்ணின் ஈரப்பதனின் மூலமாக வெளிப்படுத்துகின்ற வறட்சி, வெள்ள அபாயங்களினால் ஏற்படவிருக்கும் இழப்பு, சேதங்களை ஈடு செய்ய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் நன்மைகளை பெறவும்.

அடுத்த வளிமண்டலவியல் அறிவுரைப் பத்திரம் கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2020/21 காலபோகத்தின் டிசம்பர் மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும்.



கலாநிதி. பீ. வீ. ஆர். புண்ணியவர்தன

பணிப்பாளர்/ (விவசாய வானிலை)